**OS.No.238/2024, Dated 08.07.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 8th day of July 2025..

**வா.சா.1 -இந்திரா க/பெ. செல்வகுமார் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் தற்சமயம் சென்னையில் வசித்து வருகிறேன். வழக்கு சொத்து அவணியாபுரம், ஆமணந்தாங்கல் என்ற ஊரில் உள்ளது. இந்த வழக்கு சொத்தின் சர்வே எண். 117/7பி ஆகும். அதன் விஸ்தீரனம் 1 ஏக்கர் 15 செண்ட் ஆகும். இந்த சொத்தை தான் நான் இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ளேன். இவ்ழக்கில் வழக்கு சொத்தின் ஐக்கு பந்தியை குறிப்பிடவில்லை என்றால் சொல்லியுள்ளேன். எனக்கு ஓரளவிற்கு படிக்க தெரியும். 28.03.2003ம ் தேதியிட்ட பத்திரம் இந்த சர்வே எண். 117/7பி சொத்திற்கான பத்திரம் இல்லை என்றால் சரியல்ல. புஞ்சை சர்வே எண். 117/7சி ல் ஒரு 17 செண்ட் இடம் அந்த ஆவணத்தில் தவறாக வந்ததால் தான் 01.12.2003ம் தேதி எனது தகப்பனார் 15 செண்ட் எனக்கு கிரைமாக கொடுத்தார ் என்றால ் சரியல்ல. எதற்காக தனியாக 15 செண்ட் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் லட்சுமி என்பவரும் எனது தகப்பனாரும் அவரவர்களுக்குறிய 15 செண்டை மாற்றிக்கொண்டார்கள். அதனால் தனியாக 15 செண்டிற்க்கு பத்திரம் எழுதப்பட்டது. 01.12.2003 தேதியில் இரண்டு ஆவணங்கள் உள்ளது என்றால் சரிதான். இதில் ஒரு ஆவணம் இந்த வழக்கு சம்பந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. 01.12.2003 தேதியிட்ட விற்பனை ஆவணத்தில் கண்ட சாந்தி நிலத்திற்கு கிழக்கே வெள்ளவாரிக்கு தெற்கு தனபால் நிலங்களுக்கு வடக்கு தெற்கு இந்த சற்றெல்லைக்கு உட்பட்டு ஒரு இடமே இல்லை என்றாலும், அது கற்பனையானது என்றால் சரியல்ல. சர்வே எண். 117/7பி யை பொறுத்தவரை மேற்சொன்ன ஐக்குபந்திக்கு உட்பட்டு ஒரு இடமே இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண். 117/7பி ல் கண்ட ஒரு ஏக்கர் 15 செண்ட் நிலத்தை எனது தகப்பனார் எப்போது யாரிமிருந்து வாங்கினார் என்றால் லட்சுமியிடம் தான் வாங்கினார். தேதி சரியாக ஞாபகம் இல்லை. அந்த நிலத்தை ஒரே தவணையில் தான் வாங்கினார். பின்னிட்டு லட்சுமியுடன் 15 செண்ட் நிலத்தை மாற்றிக்கொண்டார். எனது தகப்பனார் சர்வே எண். 117/7பி ல் கிரையம் வாங்கிய பத்திரங்களில் கண்டுள்ள

ஐக்குபந்தி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஒரு ஏக்கர் 15 செண்டிற்கு தெற்கில் தனபால் இடமும், கிழக்கிலும் தனபால் இடமும், வடக்கில் வெள்ளவாரியும், மேற்கில் சாந்தி என்பவரின் இடமும் உள்ளது. 28.07.2003 தேதியில் எனது அப்பா வாங்கிய இடம் வெள்ளாவரிக்கு தெற்கு, அம்மாசிகான் நிலத்திற்கு மேற்கு, தனபால் நிலத்திற்கு வடக்கு, சாந்தி நிலத்திற்கு கிழக்கு இதன் மத்தியில் ஒரு ஏக்கர் தான் வாங்கினார் என்றால் ஒரு ஏக்கர் 15 செண்ட் வாங்கினார். இந்த ஒரு ஏக்கர் மற்றும் அதற்கான ஐக்குபந்தி மட்டும் தான் உண்மையானது என்றாலும், மற்றவை நான் கற்பனையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 1ம் பிரதிவாதியிடமிருந்து 01.12.2003ம் தேதி வாங்கியதாக குறிப்பிடப்படும் சாந்தி நிலத்திற்கு கிழக்கு, வெள்ளவாரிக்கு தெற்கு, தனபால் நிலங்களுக்கு வடக்கு மேற்கு இதன் மத்தியில் கண்ட 15 செண்ட் நிலம் என்பது 28.07.2003ம் தேதியில் வாங்கிய ஒரு ஏக்கருக்குள் தான் அடக்கம் என்றால் சரியல்ல. 01.12.2003ம் தேதி எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த ஆவணத்தின்படி எனக்கு ஒரு ஏக்கர் 10 செண்ட் கொடுக்கப்பட்டது. எனது தம்பிகளுக்கு 12.12.2011ம் தேதி அன்று தலா 2 1/2 செண்ட் நிலத்தை கொடுத்தார் என்றால் சரிதான். அந்த 5 செண்ட் நிலம் என்பது பூமியல் இல்லாத கற்பனையான இடம் என்றால் சரியல்ல. அந்த 5 செண்ட் நிலத்தை தான் நான் எனது தம்பிகளிடம் வாங்கியதாக சொல்கிறேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் கூடுதலாக எழுதிக்கொடுத்த 10 செண்ட் மற்றும் எனது தம்பிகள் எழுதிக்கொடுத்ததாக சொல்லும் 5 செண்ட் ஆகியவை பூமியில் இல்லாத நிலம் என்றால் சரியல்ல. 28.07.2003ம் தேதி 1ம் பிரதிவாதி எனது தகப்பனாருக்கு கொடுத்தது ஒரு ஏக்கர் என்றால் சரிதான். அந்த ஒரு ஏக்கர போக மீதம் உள்ள 27 செண்டை சர்வே எண். 117/7பி ல் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு 22.05.2008ம் தேதி விற்பனை செய்தார் என்றால் அது தவறானது ஆகும். அந்த 27 செண்டிற்கு ஐக்குபந்தி என்பது சாந்தி நிலத்திற்கு தெற்கு என்னுடைய நிலத்திற்கு வடக்கு மற்றும் மேற்கு 1ம் பிரதிவாதி நிலத்திற்கு கிழக்கு இதன் மத்தியில் தான் உள்ளது என்றால் அந்த 27 செண்டில் தான் லட்சுமி என்பவர் எனது தகப்பனாருக்கு 15 செண்ட் கொடுத்தார். இந்த 27 செண்டு நிலத்தை 1ம் பிரதிவாதி தான் இன்று வரை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னா் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.07.08 17:03:27 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்.

வந்தவாசி